RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22210

OPEN ACCESS

# புறநானூற்றுப் பாடலில் இடம்பெறும் நடுகல் வழிபாடு

**இரா. ஜெய்சங்கர்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமுளூர், இலால்குடி-621712, தமிழ்நாடு, இந்தியா

# The Worship of Nadukal (A Sepulchral Stone or Monument) in the Purananooru

**R. Jaisankar** [a, *]

[a] Department of Tamil, Government Arts and science college, Kumulur, Lalgudi-621712, Tamil Nadu, India

* Corresponding Author: bdujaisankar@gmail.com

Received: 21.09.2022
Revised: 03-11-2022
Accepted: 07-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

Sangam literature is one of the most vivid descriptions of the life of the ancient Tamils. Of these, Purananooru is a book that describes the valour, endowments, education, impermanence, and warfare of the ancient Tamils. Purananooru songs are considered by scholars to be the songs of the heroic era. The events of lifting and reinstating cattle have been a symbol of the valour of the ancient Tamils. This event has also been the starting point for the war. This paper describes the context in which "Nadukal" worship was created in honour of the sacrifices of the martyred soldiers in the above events. The ancient Tamils believed that the spirits of those who had been martyred would stay in the Nadukal, or sepulchral stone, and do them well. Therefore, the manner in which the stone is worshipped with flowers, food grains, and peacock feathers is described in this paper. It has been pointed out that the situation in which the worship of Nadukal later developed for the people who gave up their lives by fasting and facing the North was one in which they engaged in emotional and great activities. During the period of Silappathikaram, the context in which the worship of the Nadukal was created for women (Kannagi) and which, in course of time, was transformed into a Minor Deity, has been compared with the conclusions of the researchers and the Nadukal worship in the Purananooru songs.

**Keywords:** Nadukal Worship, Mana Passion, Heroic Death, Vadakirtu, Minor Deity Worship, Samadhi Worship.

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில், சங்க இலக்கியத்திற்கு தனிச்சிறப்புண்டு. அவற்றுள் புறநானூறு சங்க கால மக்களின் புறவாழ்வினை விவரிக்கக்கூடிய செவ்வியல் நூல்களில் ஒன்றாகும். இந்நூலில் சங்க கால மக்களின் வீரம், கொடை, கல்வி, நிலையாமை போன்ற சிந்தனைகளை மிக அழுத்தமாக பதிவு செய்துள்ளது. உலக அறிஞர் பெருமக்களால், புறநானூறு காலகட்டத்தை வீரயுகக்காலம் என்று அழைக்கப்படுகிறது. அந்த வகையில் புறநானூற்றுப் பாடல்களில் வீரத்தினை உயர்வாக கருதிய நிலை, அவ்வீரத்தினை சிறப்பிக்கும் அல்லது பெருமைப்படுத்தும் விதமாக நடுகல் எடுக்கும் வழக்கம் உருவான சூழல், காலப்போக்கில் அவை சிறு தெய்வ வழிபாடாக மாறியச்சூழலைப், இவ்வாய்வுக்கட்டுரை விவரிக்கிறது.

## நடுகல் தோற்றம்

சங்க கால மக்கள் திணை சார்ந்த வாழ்வியல் முறையையும், இனக்குழுக்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பது ஆய்வாளர்களின் முடிவு. அவ்வாறு அவர்கள் வாழ்ந்த சூழலில், அவர்களுடையப் பொருளாதாரத்தின் மையப்புள்ளியாகத் திகழ்ந்திருப்பது அவர்கள் வாழ்ந் நிலம், ஆடு, மாடுகளாகும். குறிப்பாக முல்லை நில மக்களின் பொருளாதாரத்தின் அடிப்படையாக இருந்திருப்பது மாடுகள். இனக்குழுக்களாக வாழ்ந்துள்ள இவர்களிடம் ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் என்ற செயல்பாடுகள் இருந்துள்ளன. ஒரு இனக்குழுவினர், மற்றொரு இனக்குழுவினரின் ஆநிரைகளைக் கவர்ந்து வருதலும், அதை மீட்பதற்கு எதிர்தரப்புக் குழுவினர் செயல்படுதலும் (ஆநிரை மீட்டல்), இவ்விரு குழுவினர்களுக்கிடையே சண்டை (அ) போர் நடைப்பெற்று இருப்பதைத் தொல்காப்பியம், சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறிய முடிகிறது. ஆநிரை மீட்கும் போரில், வீரமரணம் அடைந்தவர்களின் வீரத்தைப் போற்றும் விதமாக, அவரகளைப் புதைக்கும் இடத்தில் கல் நட்டு வழிபட்டனர். அவை நடுகல் என அழைக்கப்பட்டு காலப்போக்கில் நடுகல் வழிபாடாக மற்றம் அடைந்திருப்பதை புறநானூற்றுப் பாடல்வழி அறியமுடிகிறது.

## நடுகல் எடுப்பதற்குக் காரணம்

சங்க காலம் ஒரு வீரயுக காலம் என ஆய்வாளர்களால் அறியப்படுகிறது. அந்த வகையில் அக்கால மக்கள் தங்கள் இனத்திற்காக போராடி உயிர்த்தியாகம் செய்யும் தலைவனின் வீரத்தை உயர்வாகப் போற்றியுள்ளார். அத்தலைவனின் வீரத்தைச் சிறப்பிக்கும் விதமாக நடுகல் எடுக்கும் வழக்கம் தோன்றியுள்ளது என்பது ஆய்வாளர்களின் முடிவாகயுள்ளது.

காலப்போக்கில் நாடு பிடிப்பதற்கு நடைபெற்றப் போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கும், நடுகல் எடுக்கும் வழக்கம் தோன்றியுள்ளது.

“போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த வீரர்களின் ஆவி சில நாட்களுக்கு உலகில் உலாவும் என்றும், அது சாவு சடங்குகள் கழிந்த பின்பு, வேறு உலகிற்குச் செல்வதாக பழந்தமிழர் நம்பியுள்ளனர். மேலும் சாவு சடங்கு செய்வதற்கு முன்பு நடுகல் நட்டு சடங்கு செய்தால் ஆவியின் ஒரு பகுதி அங்கு தங்கும் என நம்பியுள்ளனர். விழாக்காலங்களில் பழம் பிறப்புணர்வுடைய இவ்ஆவிகள் இக்கல்லுக்கு (நடுகல்) வருமென நம்பியுள்ளனர். மேலும் வீரர்கள் போர்க்களம் செல்லும் பொழுது நடுகற்களை வாழ்த்தி பலி கொடுத்து சென்றுள்ளனர். இதனால் வீரர்களின் நடுகல்லில் அடங்கியுள்ள ஆவியானது தங்களுடன் துணையாக வரும் என நம்பியுள்ளனர்” (Gandhi, 2003).

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று

இருமூன்று மரபிற் கல்லொடு புணர” (Ilampuranar, 2005).

மலை, கடல், ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கையை வழிப்பட்ட பழந்தமிழர்கள், வீரத்தைப் பாராட்டும் விதமாகவும், இறந்த வீரர்களுக்கு நன்றி கடன் செலுத்தும் விதமாகவும் நடுகல் வழிபாட்டை உருவாக்கியுள்ளனர். வீரத்தைப் பாராட்டுவதற்கு தோன்றிய நடுகல் வழிபாடு, காலப்போக்கில் மனிதனின் பிற பண்புகளையும், சிறப்பு மிக்க இயல்புகளையும், பாராட்டும் விதமாக அவர்களின் இறப்பிற்குப் பின்பு, அவர்களது நினைவாக நடுகல் வழிபாடு வளர்ச்சிப் பெற்றிருப்பதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## நடுகற்குரியோர்

ஆநிரை மீட்போர், போரில் வீரமரணம் எய்துவோர், வடக்கிருந்தோர், பத்தினிப்பெண்டிர் ஆகியோருக்கு நடுகல் வழிபாடு செய்திருப்பதை பழந்தமிழ் இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

சான்றாக: புறம்.260, வடமோதங்கிழார் பாடலில் ஆநிரை மீட்க நடந்த போரில் வென்று, உயிர்நீத்த வீரனின் புகழையும், அவன் நடுகல்லாகப் புகழ் பெற்றதையும், பாணன் ஒருவனுக்கு எடுத்துச் சொல்வதாக அமைகிறது.

“மடம்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி

இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்

படம்செய் பந்தர்க் கல்மிசை அதுவே” (Manikkavacakar, 1998).

இப்பாடலில், நடுகல்லிற்கு மயிர்ப்பீலி சூட்டி வழிபடுகின்ற மரபும், அவ்நடுகல்லின் மேல் பந்தல் அமைத்து நிழல் உருவாக்கியத் தகவலும் தெரிய வருகிறது. மாங்குடிக் கிழார் பாடிய புறம். 335-ஆம் பாடலில், தன்னுடன் எதிர்த்து போரிட்ட வீரனையும் அவனுடைய யானையையும் வீழ்த்தி, தானும் இறந்த வீரனுக்கு நடுகல் உருவாக்கி, அதில் அவ்வீரனின் பெயரும், புகழும் எழுதி, நெல், பூத் தூவி அக்கல்லைக் கடவுளாக வழிப்பட்டுயிருப்பதை அறிய முடிகிறது.

“ஒன்னாத் தெவ்வர் முன்னின்னு விலங்கி

ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து - வீழ்ந்தெனக்

கல்லே பரவின் அல்லது

நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே” (Manikkavacakar, 1998).

## வடக்கிருந்தார் நடுகற்கள்

பழந்தமிழர் வாழ்வில் வீரத்தை பாராட்டுவதற்குத் தோன்றிய நடுகல் வழிபாடு, காலப்போக்கில் மனிதனின் பிற பண்புகளையும் பாராட்டும் வழக்கத்திற்கும் நடுகல் உருவாக்கி, வழிபடும் வழக்கம் உருவாகியிருப்பதைப் புறநானூற்றுப் பாடல்களில் காணமுடிகிறது.

“தன் நிலையிலிருந்து தாழ்வு ஏற்படும்போதும், போர்களத்தில் புறப்புண் எய்தி, அதற்காக வருத்தம் ஏற்படும் சூழலிலும், மான உணர்ச்சி ஏற்படும் சூழலிலும், நட்பு சூழலும் வடக்கிருந்து உயிர் நீத்தலுக்குரிய காரணமாக இருக்கிறது” (Gandhi, 2003).

புறம்.66, வெண்ணிக் குயத்தியார் பாடலில், கரிகால் பெருவளத்தானுக்கும், சேரமான் பெருஞ்சேரலாதனுக்கும் இடையே வெண்ணிப் பறந்தலை என்னும் இடத்தில் நடைப்பெற்றப் பெரும் போரில், சேரமான் பெருஞ்சேரலாதன் புறப்புண் பட்டதற்காக நாணி, வாளைக் கைக்கொண்டு வடக்கிருந்து உயிர்விட்டமையைப் புலவர் பதிவு செய்திருப்பதை அறிய முடிகிறது.

“கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை

மிகப் புகழ் உலகம் எய்திப்

புறப்புண் நாணி வடக்கிருந் தோனே!” (Manikkavacakar, 1998).

புறம். 213, 214, 215, 216, 217, 220, 221,222, 223 ஆகியப் பாடல்களில் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் நீத்தமையை எயிற்றியனார், பிசிராந்தையார், பொத்தியார் ஆகியப் புலவர்கள் பதிவு செய்திருப்பதைக் காண முடிகிறது. தன் பிள்ளைகளே, தன்னை எதிர்த்துப் போரிட வந்ததை எண்ணி வருந்திய கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்த போது, அவரது உள்ளம் கவர்ந்த நண்பர் பிசிராந்தையார் வருவார் என்று கூறி, அவர் அருகில் ஓர் இடம் உருவாக்கச் சொல்கிறார், அவ்வாறே அந்நண்பர் வருகை தந்து உயிர்துறக்கிறார். இவ்வாறு, இவர்களின் பாடலில் கோப்பெருஞ்சோழனின் மான உணர்ச்சியும், எயிற்றியனார், பிசிராந்தையார், பொத்தியார் ஆகியப் புலவர்கள் கோப்பெருஞ்சோழன் மீது கொண்டுயிருந்த நட்பின் சிறப்பும் பிற உலக இலக்கியங்களில் காண இயலாத வாழ்வியல் நெறியாக அமைவதைக் காணமுடிகிறது.

“காதல் கிழமையும் உடையன் அதன்தலை

இன்னதோர் காலை நில்லன்

இன்னே வருகுவன் ஒழிக்க அவற்கு இடமே” (Manikkavacakar, 1998)

புறம்.222 ஆம் பாடலில், மனைவி கருவுற்றிருக்கும் நிலையில், தன்னோடு வடக்கிருக்க வந்தப் புலவர் பொத்தியாரைத் திருப்பி அனுப்பி, உன் அன்பு மனைவி நல்ல புதல்வனைப் பெற்றெடுத்தப்பின் என்னோடு வடக்கிருக்க வா என்று கோப்பெருஞ்சோழன் அனுப்புதல், சுயநலமில்லா தூய நட்பின் ஆழத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

“புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாஎன” (Manikkavacakar, 1998)

மகன் பிறந்தப்பின்பு, பொத்தியார், கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் விட்ட இடத்தில் தானும் வடக்கிருந்து உயிர்விடுதல் ஆகியவை மனித வாழ்வின் பல பரிமாணங்களையும், அவற்றிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய பல்வேறு சிறப்புக் கூறுகளையும் அறிய முடிகிறது. கோப்பெருஞ்சோழனின் மான உணர்வு, கோப்பெருஞ்சோழன் புலவர்களோடு கொண்ட தூய நட்பு, தியாகம் ஆகியவை இன்றளவும் வணங்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. இவர்களுடைய வீரம், தியாகம், நற்குணங்கள் ஆகியவை தமிழ்ச் சமூகத்திற்கு மட்டும் அல்லாமல், ஒட்டுமொத்த மனித சமூகத்திற்கும் முன்மாதிரியாக இருப்பதைக் காண முடிகிறது.

புறம். 105-111,113-120, 236, ஆகியப் பாடல்கள், பறம்புமலையை ஆண்ட பாரியின் உற்ற நண்பர் கபிலர் பாடியது. இப்பாடல்களில் கபிலர் பாரியின் ஆட்சி சிறப்பு, வீரம், கொடை, பறம்பு மலையின் பேரழகு, பாரி மூவேந்தர்களை எதிர்கொண்ட விதம் ஆகியவற்றைச் சொல்லோவியமாகப் பதிவு செய்திருப்பது காண முடிகிறது. கபிலரின் அப்பழுக்கற்ற புலமை, பாரியின் மீது அவர் கொண்டிருந்த புனிதமான நட்பு அவர் வடக்கிருந்து உயிர் துறத்தலில் காண முடிகிறது.

“இடையில் காட்சி நின்னோடு

உடன் உறைவு ஆக்குக உயர்ந்த பாலே” (Manikkavacakar, 1998)

பாரியின் மீது கொண்ட நட்பிற்காக, கபிலர் தன் உயிரைத்துறக்கும் நிலைக்குச் சென்றிருப்பதை மேற்காணும் பாடல் புலப்படுத்துகிறது. திருக்கோவிலூரில் ஆற்றின் நடுவே சிறு குன்றின் மீது கபிலர் வடக்கிருந்து உயிர் நீத்த குன்று, இன்றளவும் கபிலர்க்குன்று என்று அழைக்கப்படுகிறது. கபிலர் பெயரில் வழிபாட்டு மன்றம் உருவாக்கப்பட்டு, கபிலரை தெய்வத்திற்கு இணையாக மக்கள் வழிபாடு செய்து வருவதைக் காணமுடிகிறது. மானஉணர்ச்சி ,சிறந்த நோக்கம் கருதி, வடக்கிருந்து உயிர்விட்ட, சேரமான் பெருஞ்சேரலாதன், கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார், பொத்தியார், கபிலர் போன்ற எண்ணற்ற சான்றோர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் பழந்தமிழர்களிடையே நிலவி வந்துள்ளது. இவை காலப்போக்கில் வழிபாட்டிற்குரிய தெய்வங்களாக மாறியிருப்பதையும் காண முடிகிறது.

## நடுகல் வழிபாடு

புறம்.306 ஆம் பாடல், அள்ளூர் நன்முல்லையார் எனும் பெண்பால் புலவர் பாடியது. இப்பாடலில், ஒரு அழகான சிற்றூர் அவ்வூரில் வாழும் இளம்பெண் ஒருத்தி, தன் குடியில் பிறந்த முன்னோர் ஒருவரின் புகழ் நிலைப்பதற்காக நடப்பட்ட நடுகல்லை ஒவ்வொரு நாளும் கைகூப்பி தொழுது வணங்குவது பதிவு செய்யப்பட்டுள்ளது.

“ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை

நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது

விருந்துஎதிர் பெறுகதில் யானே என்ஐயும்” (Manikkavacakar, 1998)

அப்பெண், கைகூப்பி தொழுவதற்கு காரணம், விருந்தினர்களை எதிர்கொண்டு வரவேற்று உபசரிப்பதற்கு இனிய இல்லற வாழவு தனக்கு கிடைக்க வேண்டும். பகைவர்களை வென்று நாட்டை நல்லமுறையில் காத்து அருளும் நற்பேறு தன் கணவனுக்கும் நாடாளும் வேந்தனுக்கும் கிடைக்க

வேண்டும் என்பதற்காக என்பதை பாடல்வழி அறிய முடிகிறது. இப்பாடல் மூலம் நடுகல் வழிபாடு என்பது வேண்டியதை அளிக்கும் இறைத்தன்மைப் பெற்ற ஒன்றாக கருதப்பெற்றிருப்பதை உணர முடிகிறது.புறம்.263 ஆம் பாடலில், ஆநிரை மீட்கச்சென்ற வீரனின் உயிர் தியாகத்துக்கு, நடுகல் உருவாக்கப்படுகிறது. அவ்நடுகல்லை வணங்கினால் மழைவரும் என்ற செய்தி பதிவாகியிருப்பதை காணமுடிகிறது.

“கொல்புனல் சிறையின் விலங்கியோன் கல்லே” (Manikkavacakar, 1998)

“நடுகல் எடுக்கும் வழக்கம், பழந்தமிழர் காலத்தில் ஆண்களுக்குரிய ஒன்றாக இருந்துள்ளது காலப்போக்கில் பெண்ணுக்கும் நடுகல் எடுத்துக் கடவுளாக்கிய நிலையினை முதன்முதலில் சிலம்பில் தான் காண முடிகிறது. இளங்கோவடிகள் தொல்காப்பியர் காட்டும் நெறியில் நின்று கண்ணகிக்குக் கல்நாட்டிக் கடவுளாக்கிய புதுமையினைச் செய்துள்ளார்”. (Gandhi, 2003)

பழந்தமிழரின் நடுகல் வழிபாடு, ஒவ்வொரு காலகட்டத்திலும் பல பரிணாம வளர்ச்சிப்பெற்று அவை தற்காலத்தில் சிறு தெய்வ வழிபாடாக மக்கள் மத்தியில் நிலவி வருகிறது.

சமுதாயத்தில் சிறப்புமிக்க இயல்புகளை, செயல்களை கொண்டிருந்தவர்களுக்கும், அவர்கள் இறப்பிற்குப் பின் அவர்கள் நினைவாக நினைவிடம் (சமாதி) தற்காலத்தில் உருவாக்கப்படுவதை காண முடிகிறது. இவை நடுகல் வழிபாட்டின் எச்சமாக கருத இடமுள்ளது.ஆனால் பழந்தமிழரின் நடுகல் வழிபாட்டிற்கும், தற்கால சமாதி வழிபாட்டிற்கும் நோக்கம் முன்னோர்களின் புகழை போற்றுவது என்றாலும், சமாதி வழிபாட்டில் பொது நலத்தைவிட சுயநலம் மேலோங்கியிருப்பதைக் காண முடிகிறது.

## முடிவுரை

புறநானூற்றுப் பாடல்களை ஆராய்ந்த போது பழந்தமிழரின் நடுகல் வழிபாட்டு முறையினை அறிந்து கொள்ள முடிந்தது. நடுகல் வழிபாட்டில் பழந்தமிழர்கள், தமது முன்னோர்களின் வீரம், தியாகம், நற்செயல்களை போற்றி அவைகளை பின்பற்றும் பழக்கங்களைக் கொண்டு இருத்ததைக் காண முடிகிறது. நடுகல்லிற்கு வழிபாடு செய்வதனால், மழை பொழியும், தங்கள் வாழ்வு வளம்பெறும், முன்னோர்களின் வாழ்வு, தியாகம் தங்களுடைய வாழ்விற்கு வளம் சேர்க்கும் என்று நம்பிக்கை கொண்டிருந்ததை பல புறநானூற்றுப் பாடல்கள் வழி அறிய முடிகிறது. காலப்போக்கில் நடுகல் வழிபாடு சிறு தெய்வ வழிபாடாக மாற்றம் பெற்றிருப்பதையும் அறிய முடிகிறது. பழந்தமிழரின் நடுகல் வழிபாட்டில் சுயநலத்தைவிட பொதுநலம் மேலோங்கியிருப்பதை காண முடிகிறது. பழந்தமிழர்கள் தங்களது முன்னோர்களின் வீரம், தியாகம், நற்செயல்கள், மான உணர்வுகளைப் போற்றி அடுத்த தலைமுறைக்கு சடங்குகள், பழக்கவழக்கங்கள் வாயிலாக கொண்டு சேர்த்துள்ளார்கள். அதுபோன்று நாமும் நமது முன்னோர்களின் நல்லொழுக்க நெறிகளை, தியாகத்தை, வீரத்தை, கடின உழைப்பின் மேன்மையை இளைய சமூகத்திற்கு வழிபாடுகள் மூலமும், செயல்பாடுகள் மூலமும் உணர்த்த வேண்டிய தேவை உள்ளது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

## References

Gandhi, K. (2003) Tamilar Palaka Valakangalum Nambikaigalum, International Institute of Tamil Studies, Chennai, India

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram, Saradha pathippagam, Chennai, India

Manikkavacakar, (1998) Purananuru, Uma Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License